
காட்சி கூடம் உரை மொழிபெயர்ப்புகள்

# #SG FASHION NOW




முகப்பு அறை வரைபடம்

1 ## #SGFASHIONNOW : ஆசிய நாகரிக அரும்பொருளகம் X நெசவுத்துணி, ஆடை அலங்காரச் சம்மேளனம்

இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள நான்கு ஆடைகளும், "சிங்கப்பூர் ஸ்டோரீஸ்" எனும் ஆடை அலங்கார வடிவமைப்புப் போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றவர்களால் வடிவமைக்கப்பட்டவை. நெசவுத்துணி, ஆடை அலங்காரச் சம்மேளனம் (TaFF), ஆசிய நாகரிக அரும்பொருளகத்துடன் கூட்டிணைந்து ஏற்பாடு செய்த "சிங்கப்பூர் ஸ்டோரீஸ்" போட்டி, சிங்கப்பூரிலுள்ள தலையெடுத்துவரும் வடிவமைப்பாளர்கள் சிங்கப்பூரை மையப்படுத்தும் திரட்டுகளை உருவாக்க சவால் விடுக்கிறது. உள்ளூர் ஆடை அலங்காரத் தொழில்துறைக்கு ஆதரவளித்து, ஆசிய கலை, கலாசார ஆர்வத்தை

வளர்க்கும் கூட்டு இலக்குடன், சிங்கப்பூரிலும் அனைத்துலக அரங்கிலும் ஆடை அலங்காரத் தொழில்துறையை மேம்படுத்த பல்வேறு துறைகளை TaFF ஒன்றிணைக்கிறது.

2020 போட்டியின் கருப்பொருள் நேரத்தின் தாக்கத்தை மையமாகக் கொண்டிருந்தது. இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றவர்கள், ஆசிய நாகரிக அரும்பொருளகத்தை ஒரு வளமாகப் பயன்படுத்தி, சிங்கப்பூரின் ஆடை அலங்காரத்தை பரந்த ஆசிய கண்ணோட்டத்துடன் அணுகக்கூடிய சாத்தியங்களை வெளிப்படுத்தும் அரும்பொருளகத் திரட்டுகளிலிருந்து ஊக்கம் பெற்றனர். ஆசிய நாகரிக அரும்பொருளகம் 2020 அக்டோபர் மாதம் இறுதிச்சுற்றை நடத்தியது. அதில் இரண்டாவது முதல் ஐந்தாவது இடத்தில் வந்த நூட் ஃபெம்மி, மார்த்தா ஹூ, CYC, நிடா ஷே

ஆகிய வர்த்தகச் சின்னங்களின் வடிவமைப்புகள் இங்கு காட்சி வைக்கப்பட்டுள்ளன. போட்டியில் வெற்றி பெற்ற கேரல் சென்னின் வெற்றிப் படைப்பு சமகாலக் காட்சிக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

TaFF-உடனான இந்தக் கூட்டு முயற்சியும், லாசால் கலைக் கல்லூரியுடன் சமகாலக் காட்சிக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற்சியும், உள்ளூர் படைப்பாற்றல் சமூகத்தின் வளர்ச்சிக்குத் துணைபுரியும் தளமாக, குறிப்பாகச் சவால்மிக்க கிருமிப்பரவல் ஆண்டில், அரும்பொருளகம் திகழமுடியும் என்பதை ஆராய ஆசிய நாகரிக அரும்பொருளகம் மேற்கொண்ட முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றன.

2 **சம்சுய் ஜம்ப்சூட் மற்றும் கைப்பை**
*அக்காலப் பெண்கள்: இன்றைய, நாளைய, எதிர்காலத் திரட்டு*
அடிலின் புத்ரி
சிங்கப்பூர், 2020
ஜம்ப்சூட்: செயற்கை மீளிழையுடன் டெனிம்; கைப்பை: தோல்
நூட் ஃபெம்மி திரட்டு

**முடிச்சு அணியூக்கு**
*அக்காலப் பெண்கள்: இன்றைய, நாளைய, எதிர்காலத் திரட்டு*
நூட் ஃபெம்மி x இன்ட்ரீக்
சிங்கப்பூர், 2020
ரோடியம் பூசிய வெள்ளி
அடிலின் புத்ரி திரட்டு

இந்த டெனிம் ஜம்ப்சூட் ஆடையும், பளிச்சிடும் சிவப்பு நிறத்திலான மடக்கக்கூடிய கைப்பையும், 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சிங்கப்பூருக்கு வந்த சம்சுய் பெண்கள் அணிந்த ஆடைகளை

ஒத்துள்ளன. குவாங்டோங் மாநிலத்தின் சான்ஷுய் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த சீனப் பெண் குடியேறிகள், கருநீல சாம்ஃபூ ஆடையும் (மேல்சட்டையும் பொருத்தமான கால்சட்டையும்), சிவப்பு நிறத் தலையணியும் அணிந்திருந்தனர். இந்த ஆடை அவர்களை வெயிலிலிருந்து பாதுகாத்தது. அதோடு, அவர்களில் பெரும்பாலோர் வேலை செய்த கட்டுமானத் தளங்களில் அவர்களுக்குப் பாதுகாப்பளித்தது. பலசாலிகளான இந்தப் பெண்கள் இன்றைய உலகில் எவ்வாறு ஆடை அணிந்திருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து வடிவம் கொடுத்திருக்கிறார் புத்ரி. இதன்வழி, சிங்கப்பூரின் ஆரம்பகால வளர்ச்சிக்குப் பங்களித்த இப்பெண்களையும் அவர் கௌரவிக்கிறார்.

அடிலின் புத்ரி ஆடை அலங்கார விற்பனைத் துறையில் பத்தாண்டுகளுக்கும் மேலாக வேலை செய்த பிறகு நூட் ஃபெம்மியைத் தொடங்கினார். நியாயமான சமூக, தொழில் முறைகளை நிலைநாட்டும் வட்டார ஸ்டூடியோக்கள், விநியோகஸ்தர்கள் ஆகியோரை மட்டுமே நூட் ஃபெம்மி ஈடுபடுத்துகிறது. மனிதர்கள், இயற்கை, சமுதாயம் ஆகியவற்றுக்கு இடையிலான நல்லிணக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் அவரது கொள்கைக்கேற்ப நூட் ஃபெம்மி செயல்படுகிறது. இந்நிறுவனம் 2016ல் தொடங்கப்பட்ட பிறகு, 2016ஆம் ஆண்டின் சிங்கப்பூர் ஆடை அலங்கார வாரத்திலும், 2017ஆம் ஆண்டின் ஜகார்த்தா மின்னிலக்க ஆடை அலங்கார வாரத்திலும் பங்கெடுத்திருக்கிறது.

**சம்சுய் பெண்.** சிங்கப்பூர், 1938-39. படத்தை வழங்கிய தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி, 2007-50928-069

## 3 மேல்சட்டையும் பாவாடையும்

*தோட்டத்தில் பெரனக்கான் தேநீர் விருந்து திரட்டு*
மெட் ஹார்ட்மன்
சிங்கப்பூர், 2020
பட்டு (பத்திக் ஓவியம்)
மார்த்தா ஹூ திரட்டு

இந்த இரண்டு பாக ஆடை, யுரேசிய பத்திக் தயாரிப்பாளர் எலிசா வென் சுய்லன் செய்த சாரோங்கை உள்ளுக்கமாகக் கொண்டது. வென் சுய்லனின் சாரோங், ஆசிய நாகரிக அரும்பொருளகத்தின் திரட்டில் உள்ளது. வென் சுய்லன் (1863-1947), *புகிடான்* (ஐரோப்பிய

பாணி பூக்கொத்து) பத்திக் ஆடை அலங்காரத்தை இந்திய ஐரோப்பியர்களிடையிலும் பெரனக்கான் சீனர்களிடையிலும் பிரபலமாக்கினார். இந்த *பெசிசிர்* (கடலோரம்) பாணியை மையமாக எடுத்துக்கொண்ட மெட் ஹார்ட்மன், சிங்கப்பூர் பூமலையைத் தழுவிய தமது திரட்டுடன் வெளிர்நிற வடிவங்களை உள்ளடக்கினார்.

இண்டிகோ செடிகளின் இலைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நீல நிற மையில் வெண்ணிற வடிவங்கள் கையால் வரையப்பட்டுள்ளன. செடிகளும் பறவைகளும் கொண்ட கண்கவர் வடிவங்கள், பூமலையின் அன்னப்பறவை ஏரியைப் பிரதிபலிக்கிறது – இதுவே சிங்கப்பூரின் ஆகப் பழமையான அலங்கார நீர்நிலை.

நார்வேயில் பிறந்த வடிவமைப்பாளரான மெட் ஹார்ட்மன், பத்தாண்டுகளுக்கு மேலாக சிங்கப்பூரில் வசித்து வருகிறார். அவரது உல்லாசத்தள வர்த்தகச் சின்னமான மார்த்தா ஹூ, இந்தோனீசிய கைவினைஞர்கள் கையால் வரைந்த பிரத்யேக பத்திக் வடிவங்களுடன் ஆடை அலங்காரங்களைத் தயாரிக்கிறது. பாரம்பரிய வடிவங்களை நவீன பட்டாடைகளில் புகுத்தி, பத்திக் கலையையும், பாரம்பரிய ஜப்பானிய மைக்கட்டு உத்தியான ஷிபோரியையும் பாதுகாப்பது இந்த வர்த்தகச் சின்னத்தின் நோக்கம்.

**சாரோங்.** கையொப்பமிட்டவர்: எலிசா வென் சுய்லன். ஜாவா, பெகலொங்கான், 1930கள். பருத்து (பத்திக் ஓவியம்). பெரனக்கான் அரும்பொருளகம், 2015-02116

## 4 மேலாடை, இடைவார், பாவாடை

*முன்னினைவு திரட்டு*
நிடா தாஹிர் ஷஹெர்யார்
சிங்கப்பூர், 2020
மேலாடை மற்றும் இடைவார்:
பட்டு, வெள்ளி, தங்கப் பூத்தையல்;
பாவாடை: பட்டு
நிடா தாஹிர் ஷஹெர்யாரின் நிடா ஷே திரட்டு

ஆசிய நாகரிக அரும்பொருளகத் திரட்டிலுள்ள மலாய் திருமண ஆடையை மேற்கோளாகக் கொண்டு, நுட்பமான, முப்பரிமாண மலர் வடிவங்களை உருவாக்கியிருக்கிறார் நிடா தாஹிர் ஷஹெர்யார். திருமண ஆடையின் புடைப்பான பூத்தையல் வேலைப்பாடு, 17ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் ஐரோப்பிய ராணுவச் சீருடைகளில் காணப்பட்ட வேலைப்பாடுகளைப் போலுள்ளன. இடுப்புப் பகுதியில் கச்சை

உள்ள மேலாடை, கேபாயாவின் வடிவைக் கோடிகாட்டுகிறது. சிங்கப்பூரின் கலப்பினத் தன்மையைப் பல்வேறு கலாசார அம்சங்களுடன் இந்த ஆடையில் ஒருங்கிணைத்திருக்கிறார் நிடா. *முன்னினைவு* என்ற தலைப்பிலான இந்தத் திரட்டு, நிடாவுக்கே உரிய பூத்தையல் மலர் வடிவ, இயற்கை வடிவ பாணியை எடுத்துக்காட்டுகிறது. நிடா இயற்கையைத் தம் வாழ்க்கையின் முக்கிய பகுதியாகக் கருதுகிறார்.

பாகிஸ்தானியப் பின்புலத்தைக் கொண்ட நிடா தாஹிர் ஷெஹெர்யார், அபு தாபியில் பிறந்து வளர்ந்தார். அவர் கடந்த பத்தாண்டுகளாக சிங்கப்பூரில் வசித்து வருகிறார். "நிடா ஷே" என்ற தனது வர்த்தகச் சின்னத்தின்கீழ், ஐக்கிய அரபு சிற்றரசிலும் மலேசியாவிலும் உள்ள அரசக் குடும்பத்தினருக்கு அவர்

ஆடைகள் வடிவமைத்திருக்கிறார். 2016, 2017 ஆண்டுகளில், சிங்கப்பூர் ஆடை அலங்கார வாரத்தில் அவர் பங்கெடுத்தார். திறன்மிகு சிங்கப்பூரர்களுக்கான வழிகாட்டுதல் வளர்ச்சித் திட்டமான "ஃபேஷன் ஃபியூச்சர்ஸ் 1.0 விருதை" 2017ல் அவர் வென்றார். இந்த விருதுடன், நியூயார்க்கில் கேரலீனா ஹெரராவிடம் அவர் வழிகாட்டுதல் பெற்றார். பாகிஸ்தானியக் கைவினைக் கலைஞர்களின் பாரம்பரியத்தை இவரது வர்த்தகச் சின்னம் வளர்க்கிறது. கையால் தைக்கும் பாரம்பரிய பூத்தையல் வேலைப்பாடுகளுக்குப் புதுவடிவம் கொடுக்கும் கைவினைக் கலைஞர்களை இச்சின்னம் ஆதரிக்கிறது.

**திருமண ஆடை.** ஜாவா, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி. ஐரோப்பிய வெல்வெட், தங்கப் பூத்தையல்.

ஆசிய நாகரிக அரும்பொருளகம், லீ கிப் லீ தம்பதியரின் அன்பளிப்பு, 2011-00109. ஆடை அலங்கார, நெசவுத்துணி காட்சிக்கூடத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

5 **மேலாடை, சட்டை, கால்சட்டை**

*வானமே எண்ணம்: பிரகாசமான வானைத் தேடிச்சென்ற நமது முன்னோர்களின் திரட்டு*

காரா சியாங்

சிங்கப்பூர், 2020

மேலாடை: செயற்கை தோல்; சட்டை: பருத்தி; கால்சட்டை: கம்பளிக் கலவை

CYC-காக காரா சியாங்கின் திரட்டு

தனது பின்புலத்தைத் தேடிச்சென்ற காரா சியாங், தனது மூதாதையர் உள்ளிட்ட குடியேறிகள் நல்ல வாழ்க்கையைத் தேடி சிங்கப்பூருக்குப்

பயணம் மேற்கொண்டபோது ஆகாயவெளியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பிரதிபலிக்கிறார். சிங்கப்பூர் வானத்தைப் படமெடுத்து, அதைக் கணினிக் குறியீடாக மாற்றி, தனது மூதாதையர்களின் கற்பனையான நாட்குறிப்புகளை அந்தக் குறியீட்டில் புகுத்தி, வான் வடிவங்களைச் சட்டையில் உருவாக்கினார் காரா. சீர்குலைக்கப்பட்ட கணினிக்கோப்பு, வடிவத்தின் இயல்பான குறைபாடுகளையும் வண்ணங்களையும் உருவாக்கியது. மாறுபாடுமிக்க தனிப்பட்ட வரலாறு, இயற்கையின் புகைப்படங்கள், கணினி உத்திகள் ஆகியவற்றைப் படைப்பாற்றலுடன் ஒருங்கிணைத்து, நவீன சிங்கப்பூர் ஆண்களின் ஆடையை வழங்குகிறது இத்திரட்டு.

CYC குடும்பத் தொழிலை காரா சியாங்கின் ஷங்காயைச் சேர்ந்த கொள்ளுத்தாத்தா திரு சியாங் யிக் சிங், கொள்ளுப்பாட்டி திருவாட்டி ஃபூ ஆ நியோக் இருவரும் தொடங்கினர். முதல் கடை 1935ல் சிங்கப்பூரிலுள்ள ஹில் ஸ்திரீட்டில் திறக்கப்பட்டது. அளவெடுத்து ஆடைகளைத் தைத்துக் கொடுக்கும் இந்தக் கடை, ஆண்களின் ஆடைகளுக்குப் பெயர்பெற்றது. பிரமுகர்கள், தொழில் தலைவர்கள் பலருக்கும் இந்தக் கடை ஆடைகளைத் தைத்துக் கொடுத்திருக்கிறது.

CYC கடையைத் தொடங்கிய திரு சியாங் யிக் சிங், அவரது மனைவி திருவாட்டி ஃபூ ஆ நியோக் இருவரும் 1946ல் தங்களது மகன்களுடன் எடுத்துக்கொண்ட குடும்பப் புகைப்படம். படத்தை வழங்கிய CYCக்கு நன்றி.